# கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்

**வளர்நிலை -7**

ஆற்றல் மிக்கவர்களால் எதையும் செய்ய முடியும் என்பது, "**கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்**" என்னும் பழமொழி உணர்த்தும் பொருளாகும். சிலர் பிடிவாத குணம் உடையவர்களாய் இருப்பார்கள். அவர்கள் நாம் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். "**தாம் பிடித்த முயலுக்குக் கால் மூன்றே**" என்று உறுதிபடச் சொல்லும் இயல்புள்ளவர்கள். அவர்களிடம் முறையாய் எடுத்துக்கூறும் ஆற்றல் மிக்கவர்களால் தான் அவர்களிடம் வெற்றி பெற முடியும்.

**"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**

**சொல்லுதல் வல்லார்ப் பெறின்"**

என்று வள்ளுவர் கூறுகிறார். அதாவது, ஒரு கருத்தினை முறையாய் வரிசைப்படுத்தி, இனிதாய் எடுத்துச் சொல்லும் ஆற்றல் உள்ளவர்களால் சொல்லப்படும்போது, இவ்வுலக மக்கள் விரைந்து அதனை ஏற்றுச் செயற்படுவார்கள் என்பதாம். கேட்போரின் கருத்தை அறிந்தும், உணர்ந்தும் நாம் பேசுவதாலும், அவர் கூறுவனவற்றைக் கேட்டு உடன்பட்டுப் பின் மறுத்து விளக்குவதாலும், உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, நம் கருத்தினை ஏற்க வைக்க முடியும்.

கேட்பவன் எத்தகைய குணங்கள் கொண்டவன் என்பதையும், எதில் அவன் ஈடுபாடு மிக்கவன் என்பதையும், அவன் வாழ்க்கையில் அடைந்த இன்பதுன்பங்கள் எவை என்பதையும் நாம் அறிந்துணர்ந்து, அவன் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் வகையறிந்து எடுத்துச்சொல்லுவதன் மூலம் அவனை நம் கருத்தினை ஏற்றுக்கொள்ளச் செய்வதில் வெற்றியடைய முடியும்.

அவன் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்களால் வெறுப்படைந்திருப்பவன் என்றால், நாமும் நம் வாழ்க்கையில் அவனைப் போலவே அடைந்த ஏமாற்றங்களை எடுத்துச் சொல்லுவதன்மூலம்,

அவனுடைய உள்ளத்திலே நமக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இந்த ஆற்றலை நாம் பெற்றுவிடுவோமேயானால், அவனை நாம் கூறுவனவற்றை ஏற்றுக்கொள்ள வைக்க முடியும்.

இப்படிப்பட்ட பல்வேறு திறமைகளைப் பெற்றிருப்பவர்களாற்தாம், தங்கள் கருத்துகளை மற்றவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியும். இத்தகைய கருத்துகளை உள்ளடக்கி இருப்பதே,‘**கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்**’ என்னும் பழமொழியாகும். சொல்லாற்றலைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் இப்பழமொழி எடுத்துச் சொல்வதாகவே நான் கருதுகிறேன்.

நன்றி, வணக்கம்!